**சுருக்கம்**

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை - மகளிர் நலம் – 2019–2020 ஆம் ஆண்டுக்கான மகளிர் தின விழா கொண்டாடுவதற்கும் மற்றும் அவ்வையார் விருது வழங்குவதற்கான செலவின தொகை ₹ 8,76,000–க்கு நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் [சந3(1)] துறை

அரசாணை (ப) எண்.17

நாள் 13.02.2020
விகாரி, மாசி 01,
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்க:

1. அரசாணை(ப) எண். 36, சமூக நலம் (ம) சத்துணவு திட்டத் (சந3) துறை, நாள் 20.03.2012.
2. அரசாணை(ப) எண். 43, சமூக நலம் (ம) சத்துணவு திட்டத் [சந3(1)] துறை, நாள் 26.02.2019.

மேலும் படிக்க:

3. சமூக நல ஆணையரின் நக.எண்.38864/மந2(2)/2019, நாள் 08.01.2020.

*****

ஆணை:

2012 –ஆம் ஆண்டு பெண்களின் முன்னேற்றத்திற்காக சிறந்த சேவ புரிந்த ஒருவருக்கு விருது வழங்கும் பொருட்டு அவ்வையார் விருது ஒன்று மேலே 1–இல் படிக்கப்பட்ட ஆணையின் வாயிலாக ஏற்படுத்தப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் உலக மகளிர் தினத்தில் விருது வழங்குவதற்கும் மகளிர் தின விழாவை கொண்டாடுவதற்கும் செலவினம் ஒப்பளிக்கப்பட்டு உரிய ஆணைகள் அரசால் வெளியிடப்பட்டு வருகின்றன.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2018–2019 ஆம் ஆண்டிற்கான உலக மகளிர் தின விழா கொண்டாடும் வகையில் சென்னை மாவட்டத்திற்கு ₹ 4,85,000–மும், இதர மாவட்டங்களுக்கு ஒரு மாவட்டத்திற்கு ₹ 3000 வீதம் 31 மாவட்டங்களுக்கு ₹ 93,000–மும் ஆக மொத்தம் ₹ 5,78,000–ம் பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்த ஒருவருக்கு அவ்வையார் விருது வழங்கும் பொருட்டு ₹ 1,50,000–ம் ஆக மொத்தம் ₹ 7,28,000–ற்கு நிதி ஒப்பளிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கருத்துருவில், சமூக நல ஆணையர், 2019–2020ஆம் ஆண்டு மாநில அளவில் உலக மகளிர் தினம் சென்னையில் கொண்டாடப்படும்பொழுது, அவ்வையார் விருதும் வழங்கப்படவுள்ளதால், விழாவில் கலந்து கொள்ளும் முக்கிய பிரமுகர்கள்

மற்றும் பார்வையாளர்களுக்கான உணவு, சிற்றுண்டி செலவுகள், விழா அரங்கத்தின் வாடகை, விழா சம்பந்தப்பட்ட பதாகைகள் (Banners), சுவரொட்டிகள் (Posters), பத்திரிக்கைச் செய்திகளுக்கான விளம்பர செலவுகள், அரங்கம் சம்பந்தப்பட்ட அனைத்து ஏற்பாடுகள் மற்றும் விழா சம்மந்தப்பட்ட அனைத்து இதர செலவுகளுக்கும் ₹ 4,92,000 செலவினத் தொகை தேவைப்படுகிறது என்றும், மாவட்ட அளவில் விழா கொண்டாடுவதற்கு விலைவாசி ஏற்றத்தின் காரணமாக ஒரு மாவட்டத்திற்கு ₹ 5000 வீதம், மொத்தம் 31 மாவட்டங்களுக்கு ₹ 1,55,000 தொகையும், அவ்வையார் விருது வழங்குவதற்கு ₹ 2,29,000–மும், ஆக மொத்தம் ₹ 8,76,000–ற்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார். 2018–2019ஆம் ஆண்டு மாநில அளவில் உலக மகளிர் தினம் நாமக்கல் மாவட்டம் மற்றும் மாவட்ட அளவில் கொண்டாடப்பட்டதற்கான செலவின விவரங்களையும் சமூக நல ஆணையர் அனுப்பியுள்ளார்.

4. சமூக நல ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்த அரசு, பின்வருமாறு ஆணைகள் வெளியிடுகிறது:–

அ) 2019-2020-ஆம் நிதியாண்டிற்கு மாநில அளவில் உலக மகளிர் தின விழா சென்னையில் கொண்டாடுவதற்கு ₹ 4,92,000–ம் மற்ற மாவட்டங்களில் கொண்டாடுவதற்கு, ₹ 1,55,000–ம் மற்றும் 2019–ஆம் ஆண்டில் பெண்கள் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்த ஒருவருக்கு அவ்வையார் விருது வழங்குவதற்கு ₹ 2,29,000–மும் ஆக மொத்தம் செலவின தொகை ₹ 8,76,000-ற்கு (ரூபாய் எட்டு இலட்சத்து எழுபத்தாறாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

ஆ) மேலே ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத் தொகையை தமிழ்நாடு நிதி தொகுப்பு 1 விதி 99ன் கீழ் முன்பணமாக பெற்று செலவினம் மேற்கொள்வதற்கு சமூக நல ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேற்படி செலவினம் ஒப்பளிப்பு தொகைக்குள் கட்டுப்படுத்தி மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், எக்காரணம் கொண்டும் கூடுதல் செலவினம் மேற்கொள்ள கூடாது எனவும் சமூக நல ஆணையர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

| வ. எண் | செலவின விவரம் | கணக்குத் தலைப்பு | செலவின தொகை |
|---|---|---|---|
| 1. | மகளிர் தின விழா செலவு | "2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன் – 103 – மகளிர் நலன் – மாநிலச் செலவினம் – BH – உலக மகளிர் தினக் கொண்டாட்டம் – 309 உதவித் தொகை – 01 நடப்பு செலவுக்கான உதவித்தொகை. (த.தொ.கு.2235–02–103–BH–0919)" (IFHRMS 2235–02–103–BH–30901) | ₹ 6,47,000 |

| | | | |
|---|---|---|---|
| 2. | அவ்வையார் விருது வழங்கும் செலவு | 2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன் – 103 – மகளிர் நலன் – மாநிலச் செலவினம் – BH – உலக மகளிர் தினக் கொண்டாட்டம் – 359 பரிசுகளும், வெகுமதிகளும் 01 – பரிசுகளும் வெகுமதிகளும்.<br>(த.தொ.கு.2235–02–103–BH–5905)"<br>(IFHRMS 2235–02–103– BH–35901) | ₹ 2,29,000 |
| | | மொத்தம் | ₹ 8,76,000/– |

6. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.எண்.6437/நிதி(சந)/ 2020, நாள் 11.02.2020–ன் படி வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி//

சோ. மதுமதி
அரசு செயலாளர்.

பெறுநர்
சமூக நல ஆணையர், சென்னை–600 015.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–600 008.
மாநிலக் கணக்காயர், சென்னை–600 018
மாநிலக் கணக்காயர் (துணிக்கை I & II), சென்னை– 600 018.
<u>நகல்</u>
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.2) துறை, சென்னை–600 009.
நிதித் (சந)துறை, சென்னை-600 009
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

14/02/2020
Under Secretary to Government
Social Welfare and Nutritious Meal
Programme Department
Secretariat, Chennai-600 009

14/02/2020